# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2019 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க,*
## *கடன் இணக்கம் (திருத்தச்) சட்டம்*

---

*(2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 05 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2019,* பெப்புருவரி மாதம் *08* ஆம் திகதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *8.00*** **தபாற் செலவு : ரூபா *15.00***

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## 2019 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, கடன் இணக்கம் (திருத்தச்) சட்டம்

[2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 05 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச.வ.- ஓ. 72/2017

### (81 ஆம் அத்தியாயமான) கடன் இணக்கக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1**. இச்சட்டம், 2019 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, கடன் இணக்கம் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

**2**. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (81 ஆம் அத்தியாயமான) கடன் இணக்கக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- (81 ஆம் அத்தியாயத்தின்) 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "ஐந்து உறுப்பினர் களை" என்னும் சொற்களிலிருந்து தொடங்கி "பெயர் குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்." என்னும் சொற்கள் வரையான சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"அது, அமைச்சரினால் நியமிக்கப்பட்ட பதினொரு உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.";

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன் மூலமும்:-

"(2) சபையானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) (i) மேல் நீதிமன்ற நீதிபதியொருவராக அல்லது மாவட்ட நீதிபதியொருவராகப் பதவிவகிக்கின்ற அல்லது பதவி வகித்துள்ள; அல்லது

(ii) சட்டத்தரணியொருவராகப் பதினைந்து ஆண்டுகளுக்குக் குறையாத உயர்தொழில் சார் அனுபவத்தையுடைய,

ஆட்களைக் கொண்டுள்ள ஏழு உறுப்பினர்கள்; அத்துடன்

(ஆ) (i) சட்டத்தரணியொருவராகப் பத்தாண்டு களுக்குக் குறையாத உயர்தொழில்சார் அனுபவத்தையுடைய;

(ii) இலங்கை நிருவாக சேவையில் அல்லது ஒரு நாடுதழுவிய சேவையில் வகுப்பு I அலுவலர் என்ற பதவியை வகிக்கின்ற அல்லது வகித்துள்ள; அல்லது

(iii) வியாபாரம் மற்றும் வர்த்தகத்துறையில் அனுபவம்கொண்டுள்ளவரான

ஆட்களைக்கொண்டுள்ள நான்கு உறுப்பினர்கள்.";

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன் மூலமும்:-

"(3) இரண்டாம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவரைச் சபையின் தவிசாளராகவிருப்பதற்கு அமைச்சர் நியமித்தல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு, "சபையானது காலத்துக்குக்காலம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அமைச்சரானவர் காலத்துக்குக்காலம்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு, இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

*"கிளைச் சபைகளை அமைத்துரு வாக்குதல்.*

8. (1) ஒவ்வொரு கிளைச் சபையும், ஒரு தவிசாளரையும், அமைச்சர் தீர்மானிக்கக்கூடியவாறாக நான்கை விஞ்சாதவர்களும் இரண்டுக்குக் குறையாதவர்களுமான அமைச்சரினால் நியமிக்கப்பட்ட அத்தகைய எண்ணிக்கையினரான ஏனைய உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஒவ்வொரு கிளைச் சபையினதும் தவிசாளர், சபையின் உறுப்பினராகவிருத்தல் வேண்டுமென்பதுடன்-

(அ) ஒரு மேல்நீதிமன்ற நீதிபதியாக அல்லது ஒரு மாவட்ட நீதிபதியாகப் பதவி வகிக்கின்ற அல்லது வகித்துள்ள ஆளொருவராகவிருத்தலும் வேண்டும்; அல்லது

(ஆ) ஒரு சட்டத்தரணியாகப் பதினைந்தாண்டுகளுக்குக் குறையாத உயர்தொழில்சார் அனுபவத்தைக் கொண்டுள்ள ஆளொருவராகவிருத்தலும் வேண்டும்.

(3) ஒவ்வொரு கிளைச் சபையினதும் ஏனைய உறுப்பினர்கள் பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) ஒரு சட்டத்தரணியாகப் பத்தாண்டுகளுக்குக் குறையாத உயர்தொழில்சார் அனுபவத்தைக் கொண்டுள்ளோர்; அல்லது

(ஆ) இலங்கை நிருவாக சேவையில் அல்லது ஒரு நாடு தழுவிய சேவையில் வகுப்பு I அலுவலரென்ற பதவியை வகிக்கின்றோர் அல்லது வகித்துள்ளோர்.

(4) கிளைச் சபையின் எவரேனும் உறுப்பினர், எந்நேரத்திலும் -

(அ) கிளைச்சபையிலான தமது பதவியிலிருந்து விலகலாம்;

(ஆ) குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக அமைச்சரினால் பதவியிலிருந்து அகற்றப்படலாம்.

(5) பதவியிலிருந்து அகற்றப்பட்டுள்ள ஆளொருவர் தவிர்ந்தவரும் கிளைச் சபையொன்றின் உறுப்பினரொருவராக இல்லாதொழிகின்றவருமான எவரேனுமாள் மீளநியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.”.

**5**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*